நாள்: 27.01.2025.
O.S. No. 29/2019
பெயர்: அன்பழகன் த/பெ. சுப்பையா
வா.சா.1

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

நான் இவ்வழக்கின் 1 ம் வாதி என்றால் சரிதான். எனக்கு பூர்வீகம் குடவாசல் தாலுக்கா திருவிடைச்சேரி என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக பூர்வீகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சென்னை குரோம்பேட்டையில் வசிக்கிறேன் என்றாலும் எனது சகோதரர் 2 ம் வாதியான மதியழகன் ஆந்திரா காக்கி நாடாவில் வசிக்கிறார் என்றாலும் சரிதான். நானும் எனது சகோதரர் மதியழகனும் 30 வருடங்களாக தாவா சொத்து கிராமத்தில் வசிக்காமல் வெளியூரில் வசிக்கிறோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடும்பத்தினர் 4 தலைமுறையாக தாவா சொத்து உள்ள கிராமத்தில் வசிக்கிறார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி விஜயகுமார் எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது</u>

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.